1971 டிசம்பர் 11]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் உற்பத்தியாகின்ற பழவகைகள் அயல்நாடுகளிலேயிருந்து நமக்கு அந்நியச் செலாவணியினை ஈட்டுகின்ற வகையிலே இருக்கின்றன. காஷ்மீர் போன்ற மாநிலங்களிலே உள்ளவர்கள் அயல்நாடுகளிலே இருக்கின்ற தூதுவர்களோடு தொடர்புகொண்டு அவர்களுடைய துணையுடன் ஆங்காங்கு ஷோ ரூம்ஸ் வைத்து பழவகைகளுக்கு நல்ல விளம்பரம் கொடுத்து விற்பனை பெருகியிருக்கிறது. அதைப்போன்று நம்முடைய மாநில அரசாங்கமும் மத்திய அரசின் துணையுடன் அந்த அந்த நாடுகளில் உள்ள தூதுவர்களோடு தொடர்பு கொண்டு நம் தமிழகத்தில் உற்பத்தியாகும் பழவிற்பனையை அதிகப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் ஆரஞ்சுப் பழம் ஏற்றுமதி செய்யப்படும் அளவிற்கு அதிகமாக இல்லை, மைசூர், கூர்க் முதலிய இடங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆரஞ்சு சென்னைத் துறைமுக வாயிலாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றது. 1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளில் வேறு எந்தவிதமான பழங்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. பழ அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திராட்சை பயிரிட, ஒரு ஏக்கருக்கு ரூ. 1,500 வீதம் ஒரு நபருக்கு ரூ. 6,000 மேற்படாமலும், மற்ற பழங்கள் பயிரிட, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் ஒரு நபருக்கு ரூ. 2,000-க்கு மேற்படாமலும் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் பொறுத்தவரையில் சீனு, பார்மோசா, ஆஸ்திரேலியா, இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து ஆரஞ்சுப் பழத்தை சிங்கப்பூர் சந்தையில் விற்பனை செய்ய போட்டி அதிகமாக உள்ளது. வெளிநாட்டு வியாபாரிகள் பழத்திற்குரிய தொகையை வாங்குவோரிடத்து விற்ற பின்பே செலுத்துகிறார்கள். மேலும் இப்பழங்கள் எளிதில் அழியும் தன்மைவாய்ந்தவை. ஆகவே உடனடியாகச் செய்வதற்கு இயலாது.

Fruit Preservation Unit in Coimbatore.

* 285 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of Government to open a fruit preservation unit in Coimbatore; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இவ்வினவுக்கு இடமில்லை.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பழத்தோட்டங்கள்.

* 286 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழத்தோட்ட அபிவிருத்தி (Horticultural Development Scheme) திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு எவ்வளவு பேருக்கு எவ்வளவு கடன் தொகை அளிக்கப்பட்டது ?

(இ) எத்தனை ஏக்கரில் பழத்தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன ?